**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024 ம் ஆண்டு ஜூலை திங்கள் 24–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.07/2022 in O.S.186/2013**

அருண்ராஜ் த/பெ. ராகவன் ... மனுதாரர்/4 ம் பிரதிவாதி

//எதிர்//

ராமச்சந்திரன் ... எதிர்மனுதாரர்/வாதி

இவ்வழக்கு கடந்த 20.11.2023 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழக்கிடும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் சி.பி.சி.பிரிவு 45 மற்றும் 73 of Evidence Act மற்றும் பிரிவு 151–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, தாவாவில் தாக்கல் செய்துள்ள Forgery உயிலில் உள்ள ராகவனின் கையெழுத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட (Admitted Signature உள்ள) 14.10.2001 ம் தேதிய ராகவனின் கிரையப் பத்திரத்தில் உள்ள ராகவனின் கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை சமர்பிக்க Expert ஒருவரை நியமித்து Expert opinion–க்கு அனுப்ப உத்திரவிட வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/4 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர், 1 ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல்6 வரை உள்ள பிரதிவாதிகளின் தந்தையுமான ராகவன் என்பவர் எதிர்மனுதாரருக்கு ஒரு உயில் ஆவணம் சென்ற 13.06.2011 ம் தேதியன்று எழுதி வைத்துள்ளதாகவும், அதன்படி தாவா சொத்துக்கள் அவருக்கு பாத்தியமும், உரிமையும் உள்ளது என்றும் கூறி தாவாவை மனுதாரர் மீது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் இம்மனுவினை மற்ற பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் தாக்கல்

செய்துள்ள உயில் ஆவணத்தை அவருக்கு வேண்டியவர்களை வைத்து போர்ஜரியாக தயாரித்தும், சாட்சிகளாகவும், வரைவு தயாரிப்பாளராகவும் கையொப்பம் செய்ய வைத்து 1ம் பிரதிவாதியின் கணவரும் மனுதாரரின் தகப்பனாருமான ராகவனின் கையெழுத்தை அதில் Forgery செய்து வழக்கில் அந்த உயிலை எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி உயில் உண்மையானதல்ல என்றும், அந்த உயிலில் உள்ள கையெழுத்து மனுதாரரின் தந்தை ராகவனுடையதல்ல என்றும், அவருடைய கையெழுத்தைப் போன்று போர்ஜெரி செய்து உயில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும், ராகவனின் உண்மையான கையெழுத்தை றேம்படி உயிலில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் அது 100% போர்ஜெரி செய்யப்பட்டது என்று தெளிவாக தெரியவரும் என்றும், ராகவனின் கையெழுத்து உள்ள பதிவு செய்யப்பட்ட 14.10.2004 கிரயப்பத்திர ஆதரவு பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றும் அதன் பிறகு ராகவன் யாருக்கும், எந்தவித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், ஆதலால் தாவாவில் தாக்கல் செய்துள்ள Forgery உயிலில் உள்ள ராகவனின் கையெழுத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட (Admitted Signature உள்ள) 14.10.2004ம் தேதிய ராகவனின் கிரையப் பத்திரத்தில் உள்ள ராகவனின் கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை சமர்பிக்க Expert ஒருவரை நியமித்து Expert opinion-க்கு அனுப்ப உத்திரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் தரப்பில் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தில் உள்ள ராகவன் கையெழுத்தினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகக் கூறும் 13.06.2011 தேதிய ஆதரவுடன் ஒப்பிட Expert opinion-க்கு அனுப்ப வேண்டும் என்று கோரியுள்ளது ஏற்புடையதல்ல என்றும், ஏனெனில், மறுபடி உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து பொருத்து சந்தேகம் இருந்தால், சாட்சிய சட்டப்படி மறுபடி உயில் ஏற்பட்ட வருடத்திற்கு முன்பு மூன்று வருடத்திற்குள் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து அதனை மட்டுமே மேற்படி உயில் ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்க அனுப்ப முடியும், தவிரவும் மனுதாரர் மனு

அபிடவிட்டில் 14.10.2004 தேதிய ஆவணம் என்றும், மனுவில் 14.10.2001 தேதிய ஆவணம் என்றும் மாறி மாறி குறிப்பிட்டுள்ளதலிருந்தே மனுதாரர் கோருவது ஏற்புடையதல்ல என்றும், மனுவின் அடிப்படையில் தாவாவில் தாக்கல் செய்துள்ள உயிலை ஒப்பிட்டு பார்த்து அனுப்ப முடியாது என்றும், ராகவன் உண்மையில் உயில் ஆவணம் எழுதிகொடுத்தது தான் என்றும், தாவாவில் இருதரப்பிலும் முழு விசாரணை செய்து முடிவுற்று வாதத்திற்கு உள்ள நிலையில், மனுதாரருக்கு வழக்கு கூடி வராது என்று தெரிந்து கொண்டு தேவையில்லாத இது போன்ற மனுக்களை தாக்கல் செய்து காலம் தாழ்த்தி வருகிறார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>5) பிரச்சனைக்கான தீர்வு:–</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தை அவருக்கு வேண்டியவர்களை வைத்து போர்ஜரியாக தயாரித்தும், சாட்சிகளாகவும், வரைவு தயாரிப்பாளராகவும் கையொப்பம் செய்ய வைத்து 1ம் பிரதிவாதியின் கணவரும் மனுதாரரின் தகப்பனாருமான ராகவனின் கையெழுத்தை அதில் Forgery செய்து வழக்கில் அந்த உயிலை எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி உயில் உண்மையானதல்ல என்றும், அந்த உயிலில் உள்ள கையெழுத்து மனுதாரரின் தந்தை ராகவனுடையதல்ல என்றும், அவருடைய கையெழுத்தைப் போன்று போர்ஜெரி செய்து உயில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும், ராகவனின் உண்மையான கையெழுத்தை மேற்படி உயிலில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் அது 100% போர்ஜெரி செய்யப்பட்டது என்று தெளிவாக தெரியவரும் என்றும், ராகவனின் கையெழுத்து உள்ள பதிவு செய்யப்பட்ட 14.10.2004 கிரயப்பத்திர ஆதரவு பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றும் அதன் பிறகு ராகவன் யாருக்கும், எந்தவித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை

என்றும், ஆதலால் தாவாவில் தாக்கல் செய்துள்ள Forgery உயிலில் உள்ள ராகவனின் கையெழுத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட (Admitted Signature உள்ள) 14.10.2001ம் தேதிய ராகவனின் கிரையப் பத்திரத்தில் உள்ள ராகவனின் கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை சமர்பிக்க Expert ஒருவரை நியமித்து Expert opinion–க்கு அனுப்ப உத்திரவிட வேண்டும் என்று வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் தரப்பில் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தில் உள்ள ராகவன் கையெழுத்தினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகக் கூறும் 13.06.2011 தேதிய ஆதரவுடன் ஒப்பிட Expert opinion–க்கு அனுப்ப வேண்டும் என்று கோரியுள்ளது ஏற்புடையதல்ல என்றும், ஏனெனில், மறுபடி உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து பொருத்து சந்தேகம் இருந்தால், சாட்சிய சட்டப்படி மறுபடி உயில் ஏற்பட்ட வருடத்திற்கு முன்பு மூன்று வருடத்திற்குள் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து அதனை மட்டுமே மேற்படி உயில் ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்க அனுப்ப முடியும், தவிரவும் மனுதாரர் மனு அபிடவிட்டில் 14.10.2004 தேதிய ஆவணம் என்றும், மனுவில் 14.10.2001 தேதிய ஆவணம் என்றும் மாறி மாறி குறிப்பிட்டுள்ளதலிருந்தே மனுதாரர் கோருவது ஏற்புடையதல்ல என்றும், மனுவின் அடிப்படையில் தாவாவில் தாக்கல் செய்துள்ள உயிலை ஒப்பிட்டு பார்த்து அனுப்ப முடியாது என்றும், ராகவன் உண்மையில் உயில் ஆவணம் எழுதிகொடுத்தது தான் என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடிக்குரியது என்று வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. மேற்படி இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்கையில் 1ம் பிரதிவாதியின் கணவரும் மனுதாரரின் தந்தையுமான ராகவன் வாதி பெயருக்கு எழுதிவைக்கப்பட்ட உயில் ஆவணமானது 13.06.2011 அன்று ஏற்பட்டுள்ளது. அதில் உள்ள மனுதாரரின் தந்தையின் கையெழுத்து போர்ஜரி செய்யப்பட்டுள்ளது என்றும், ராகவனின் உண்மையான கையெழுத்தை மேற்படி உயிலில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் உண்மை தெரியவரும் என்றும், ராகவனின் கையெழுத்து உள்ள பதிவு செய்யப்பட்ட 14.10.2004 கிரயப்பத்திர ஆதரவில்

கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. ஒருவரின் கையெழுத்தை ஒப்பிட்டு பார்க்க வேண்டுமென்றால் அவருடைய சர்சைக்குரிய கையெழுத்துடன் அவரது ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். மேலும் இரண்டு கையெழுத்துக்களும் சமகாலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். உயில் ஆவணத்தில் உள்ள சர்ச்சைக்குரியதாக கூறப்படும் கையெழுத்து 13.06.2011 போடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட கிரய ஆதரவில் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தாக கூறப்படும் கையெழுத்து 14.10.2004 ல் ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆவணங்களுக்கும் 7 வருட இடைவெளி உள்ளது. எனவே எதிர்மனுதாரர் எதிருரையில் சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ள கூடியதாகவே உள்ளது.

9. மேலும், நமது மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பில்,

**Hon'ble High Court of Madras**
**Lakshmi Vs Gajendran**
**C.R.P.(PD) No.918 of 2015**

Para (6) From the materials available on record, it is seen that admitted signature produced by the respondents 1 and 2 and disputed signature produced by the petitioners are not on contemporaneous period. The disputed signature in Ex.B4/Koor chit is dated 14.02.1968 and admitted signature in Ex.A15/service register is dated 31.12.1977.

Para (7) It is well settled that the disputed signature can be compared with contemporaneous admitted signature only. In the present case, there is nine years difference between the disputed singnature and admitted signature. The learned Judge failed to consider this fact and also well settled judicial pronouncement on erroneous reason, allowed the application. The learned judge has not properly exercised his power conferred on him and in view of the above, the impugned order of the learned Judge is liable to be set aside and it is hereby set aside.

மேற்கண்ட முன்தீர்ப்பின் படி பார்க்கையில் ஒருவருடைய கையெழுத்தை ஒப்பிட்டு பார்க்கவேண்டும் என்றால் சமகாலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு உள்ளபோது மனுதாரரின் மனு ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு ஜூலை திங்கள் 24–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.07.24 12:36:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.07.24 12:37:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.